(ஆ) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மீது எழுப்பப் பட்ட உரிமை மீறல் பிரச்சினை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அடுத்து 13—7—1977 அன்று இப்பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு சுப்பு அவர்கள் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மீது உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சனையை எழுப்பினார்கள். எனது தீர்ப்பைப் பின்னர் அறிவிப்பதாக நான் தெரிவித்து இருந்தேன். இப்போது எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

திரு சுப்பு அவர்கள் தமது பிரச்சினையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மதுரையில் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்த சில கருத்துக்கள் இப்பேரவை கூடியிருக்கையில் அரசின் கொள்கைகளை அவைக்கு வெளியே அறிவித்ததாகும் என்றும், அதனால் அது அவையின் உரிமையை மீறியதாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது குறித்து எனக்கு அளித்துள்ள விளக்கத்தில் மதுரையில் பத்திரிகை நண்பர்களோடு அவர் பேசிக்கொண்டு இருக்கும்போது மாநகராட்சித் தேர்தல் பற்றியும், கட்டாய ஓய்வு பெற்றோர், இளைஞர் அணி, சீரணி பற்றியும் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு அது பற்றி அரசு முடிவு செய்யும் என்று தெரிவித்ததாகவும் எந்தப் புதிய அறிவிப்பையும் தரவில்லை என்றும், பத்திரிகைகள் சிலவற்றில் அந்தச் செய்திகள் மாறுப்பட்டோ அல்லது முரண்பட்டோ வந்திருந்தால் அதற்குத் தான் பொறுப்பல்ல என்றும் கூறியுள்ளார்.

அரசின் கொள்கை பற்றிய விளக்கங்களைப் பேரவை கூடியிருக்கும் நாட்களில், பேரவையில் தான் அளிக்க வேண்டும் என்பது ஒரு நியதிதானே ஒழிய, வேறில்லை. ஆயினும் அவை கூடியிருக்கும் நாட்களில், மாண்புமிகு அமைச்சர்கள் இதுபோன்ற கொள்கை விளக்கங்களை இவ்அவையிலேயே கொடுப்பது அவைக்குக் கொடுக்கும் மரியாதை யாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கம் ஏதும் அளிக்கவில்லை என்று கொடுத்துள்ள விளக்கத்தை ஏற்று, திரு சுப்பு அவர்கள் எழுப்பிய பிரச்சினையில் அவை உரிமை மீறல் ஏதும் இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.